May 08 2010

உறுப்பினர் பெயர்: கடவுச்சொல்: login பதிவு செய்ய...
விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்கப்படும் - அமைச்சர்... பத்திரிகையாளர்களு




சிறப்புக்கட்டுரை



மும்பை 26/11 தாக்குதல்-அஜ்மல் அமீர் கசாப் : தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படுமா!?
Thursday, 06 May 2010

அதிகாலை ஸ்பெஷல்



தமிழக அரசியல் சாக்கடைக்குள் சிக்கித் தவிக்கும் பார்வதி அம்மாள்
Monday, 26 April 2010

தேடுக... முதற் பக்கம் ஆரோக்கியம் அதிகாலை ஸ்பெஷல் கோடம்பாக்கம் கொத்துப்பரோட்டா அன்னாடங்காச்சி புகைப்படத்தொ

செய்திகள்
மாவட்டம்
அரசியல்
திரையுலகம்
ஆன்மீகம்
சர்ச்சை
இலக்கியம்
சின்னத்திரை
விருந்து
சுற்றுலா
நேர்காணல்
ஆடியோ
சுடோகு
சிறுவர் பக்கம்
படச்செய்திகள்
மகளிர் பக்கம்
அறிவியல்
வெப் டிவி
தொண்டுநிறுவனம்
சிறப்புக்கட்டுரை
அன்னாடங்காச்சி
தகவல்களஞ்சியம்
சிற்றிதழ்கள்
நிகழ்வுகள்
சிறப்பிதழ்கள்
கோடம்பாக்கம்

Please install the DS-Syndicate component.

Kiva Microfinance
"Loans that Change Lives." Make a Difference and Lend Today!
Public Service Ads by Google

# "நடேசனை சரணடையவைத்து கொன்றது நானே"- ஜெகத்கஸ்பரின் ஒப்புதல் வாக்குமூலம்!

on 08-01-2010 18:41
Favoured : 26
Published in : சர்ச்சை, அரசியல்

**பக்கம் 1 / 2**

திருடன் எத்தனை நாள் திட்டம் போட்டுத் திருடினாலும் திருடுகிற இடத்தில் ஏதோ ஒரு தடயத்தை விட்டுத்தான் செல்வான் என்று சொல்வார்கள். விசாரணை நேர்மையாக இருந்தால் சிறிய தடயம் கூட அவனைச் சிக்க வைத்து விடும். நடேசன் வெள்ளைக் கொடியோடு சரணடைந்த நிகழ்வில் அப்படித்தான் சிக்கியிருக்கிறார் ஜெகத் கஸ்பர் என்னும் பாதிரி.



"ஈழம் செத்த பிறகும் இரத்தம் குடிக்கிறார் ஜெகத் கஸ்பர்" என்ற கட்டுரை வினவு தளத்தில் வெளியானதைத் தொடர்ந்து குமுதம் ரிப்போர்ட்டர் இதழுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியிருக்கும் ஜெகத் கஸ்பர், "மௌனத்தின் வலி" நூல் முழுக்க முழுக்க போருக்கு எதிரான பத்திரிகையாளர்கள் சார்பில் கொண்டு வரப்பட்டதுதான் என்றும், கவிதைகள் திருத்தப்பட்டது மற்றும் வாங்கிய கவிதைகளை வெளியிடாமல் தி.மு.க.விற்கு ஆபத்தில்லாத கவிதைகளை வெளியிட்டது எல்லாமே பத்திரிகையாளர்கள்தான் என்று கூறி தப்பித்துக் கொண்டிருக்கிறார். போருக்கு எதிரான பத்திரிகையாளர் அமைப்பு பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் தனியே எழுதுவோம்.

மேற்கூறிய குமுதம் ரிப்போர்ட்டர் நேர்காணலில், அதன் நிருபர் கடைசி நேரத்தில் நடந்த நிகழ்வுகள் தொடர்பாக மூன்று கேள்விகளை கஸ்பரிடம் முன்வைக்கிறார். அந்தக் கேள்விகளையும் அதற்கான ஜெகத் கஸ்பரின் பதிலையும் அப்படியே கீழே தருகிறோம்.

கேள்வி : இறுதிக்கட்ட போரின் இறுதி நாட்களில் இந்தியாவுக்கும், புலிகளுக்கும் நடந்த பேச்சு வார்த்தையில் இந்தியா சார்பில் நீங்களும் கலந்து கொண்டீர்கள். போரை நிறுத்த புலிகளிடம் என்னென்ன நிபந்தனைகள் முன் வைக்கப்பட்டன?

கஸ்பர் : இதில் சம்பந்தப்பட்டவர்களின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்டுதான் எதையும் நான் பேச முடியும். அந்த நாள் வரும்போது பேசுவேன். ஆனால், நிச்சயமாக சண்டை நிறுத்தத்திற்கு வாய்ப்பு இருந்தது. 48 மணி நேரத்துக்குள் சண்டை நிறுத்தம் என்று வாய்ப்புத் தரப்பட்டது. 'தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வு வரும்போது ஆயுதங்களை ஒப்படையுங்கள்' என்று விருப்பத்தை மட்டுமே கேட்டிருந்தோம். நிச்சயமாக அவர்கள் (புலிகள்) அதை ஏற்கவில்லை.

கேள்வி : ஏன் அதை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை?

கஸ்பர் : அவர்கள் பக்கம் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. மீண்டும் சொல்கிறேன். நிச்சயமாக சண்டை நிறுத்தத்திற்கு வாய்ப்பு இருந்தது. அதற்கு வாக்குறுதியும் தரப்பட்டது. ஆயுதங்களை ஒப்படைக்க விருப்பம் மட்டுமே கேட்டிருந்தார்கள். நிபந்தனை விதிக்கவில்லை.

கேள்வி : வெளிப்படையாகச் சொல்லுங்கள். ஈழ விடுதலைப் போராட்ட அழிவைத் தடுக்க புலிகள் என்ன செய்திருக்க வேண்டும்?



கஸ்பர் : கடைசிக் கட்டத்தில் என்னென்ன நடந்தது என்று முழுமையாக நமக்குத் தெரியாது. எனவே, தீர்மானமான கருத்தைச் சொல்ல முடியாது. என்னளவில், சண்டை நிறுத்தத்திற்கு ஒரு வாய்ப்பு இருந்தது. அது நடக்கவில்லை. அது நடந்திருந்தால் போராட்டம் காக்கப்பட்டிருக்கலாம். எனக்குத் தெரிந்தவரை, 'தலைவர் (பிரபாகரன்) சரணடைய வேண்டும், பொட்டு அம்மான் சரணடைய வேண்டும்' என்று எந்த நிபந்தனையும் பேச்சுவார்த்தையின்போது விதிக்கப்படவில்லை. 'ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக இருங்கள்' என்றார்கள். இதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அது ஏன் என்றும் எனக்குத் தெரியாது.'

போர் முடிந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு கடைசி நேர முள்ளிவாய்க்கால் போர் குறித்து இப்போது பதிவு செய்கிற ஜெகத் கஸ்பர், போர் நிறுத்தம் ஒன்றிற்கு இலங்கை அரசு தயாராக இருந்ததாகவும், புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கவோ போர் நிறுத்தத்திற்கு சம்மதிக்கவோ இல்லை என்றும் சொல்கின்றார். புலிகளுக்கும், இந்திய அரசுக்குமிடையிலான கடைசிநேரத் தூதராகச் செயல்பட்ட இவரின் பேச்சைக் கேட்டிருந்தால் போராட்டம் காப்பாற்றப்பட்டிருக்கும் என்றும் இப்போது குமுதம் இதழில் சொல்லியிருக்கின்றார் ஜெகத் கஸ்பர்.

WorldNews

Related news items
- துபாயில் நிரித்யசமர்பண் 2010 எனு சிறப்பு நடன நிகழ்ச்சி -06/05/2010
- துபாயில் நிரித்யசமர்பண் 2010 எனு சிறப்பு நடன நிகழ்ச்சி -06/05/2010
- இன்னொரு சைக்கிள் ஓட்டியும், பின்னொரு சிறுவனும் : செல்வராஜ் ஜெகதீசன் -30/04/2010
- எனதறையின் சாத்தான் : லோ.கார்த்திகேசன் -30/04/2010
- கோடையும் வாடையும் : கிளியனூர் இஸ்மத் -30/04/2010

Newer news items
- இறால் வறுவல் - 'அதிகாலை' அக -18/02/2008
- சிக்கன் பிரியாணி - அதிகாலை அக -15/01/2008
- மட்டன் பிரியாணி - அதிகாலை அகல்யா -15/01/2008
- செட்டிநாடு கோழிக்குழம்பு -12/01/2
- செட்டிநாடு மீன் குழம்பு - அதிகாலை அகல்யா -02/01/2008

<< Previous Page

Newer news items
- தோழா: விமர்சனம் -14/04/2008
- சந்தோஷ் சுப்ரமணியம் - விமர்சன -12/04/2008
- யாரடி நீ மோகினி : விமர்சனம்

இன்றைக்கு இப்படிப் பேசுகிற இதே ஜெகத் கஸ்பர், போருக்குப் பின்னர் மே மாதம் 21ம் தேதி வெளியான நக்கீரன் இதழில் "யுத்த துரோகம்" என்னும் பெயரில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

அக்கட்டுரையில் ஜெகத் எழுதியிருந்தது இதுதான்.

"கடைசி நாளில் அதாவது கடந்த சனிக்கிழமை (16.05.2009) பிரபாகரனும், அதிமுக்கிய தளபதிகள் சிலரும் களத்தை விட்டு அகன்ற பின் காயமடைந்த போராளிகளை அப்புறப்படுத்திக் காப்பாற்றும் முடிவை எடுத்து அதற்காக புலிகளின் கடற்படைத் தளபதி சூசை மதுரையில் ஒருவரோடு தொடர்பு கொண்டதாகவும், அந்த மதுரை நபர் சு.ப.வீயைத் (சு.ப. வீரபாண்டியன்) தொடர்பு கொண்டதாகவும், கடைசியில் கனிமொழியின் உதவியோடு காங்கிரசு கட்சியின் முக்கியப் பிரமுகரோடு பேசி (எதார்த்தமான முடிவு) ஒன்று எடுக்கப்பட்டதாகவும் கூறுகின்றார். "புலிகளின் அனைத்துலகப் பொறுப்பாளர் செல்வராசா பத்மநாதன் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவருக்கு ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக உள்ளோம் என்று பேக்ஸ் மூலமாக உடனே தெரிவிக்க வேண்டும். மற்றவைகளை இந்தியா பார்த்துக் கொள்ளும்" என்பதுதான் அந்த முடிவு.

இம்முடிவு எடுக்கப்பட்டு இரவு 10 மணிக்கு லண்டனில் உள்ள ஜெகத் கஸ்பர்ராஜின் நண்பர் மூலம் செல்வராசா பத்மநாதனுக்கு தகவல் சொல்லப்பட, அவரும் மின்னல் வேகத்தில் இயங்கி 'இந்தியாவிடமே (அதாவது கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம்) ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகவும், அது சாத்தியமில்லை என்றால் ஐ.நா ஏற்பாட்டில் ஒப்படைக்கிறோம்' என்றும் இரவு 11.50 மணிக்கு முடிவு எடுத்ததாகவும் கஸ்பர் கூறுகிறார்.

உடனே கனிமொழி ஏற்கனவே பேசிய அந்தக் காங்கிரசு பெரியவரைத் தொடர்பு கொண்டு இந்தியா அல்லது ஐ.நா.வின் முன்னிலையில் சரணடைவது என்ற புலிகளின் முடிவைச் சொன்ன போது, 'கால அவகாசமில்லை. இந்தியாவிடம் சரணடைவதற்கான சாத்தியப்பாடுகள் இப்போது இல்லை. இலங்கை ராணுவத்திடமே சரணடைவதுதான் இப்போதைய நெருக்கடி நிலையில் ஆகக் கூடியது' என்று அந்த காங்கிரசு பெரியவர் சொன்னதாகவும் கூறுகின்றார்.

பின்னர் மக்களைக் காப்பாற்றும் பொருட்டு, இலங்கை ராணுவத்திடமே சரணடைவது என்ற முடிவை அதே சனிக்கிழமை நள்ளிரவு புலிகள் எடுத்ததாகவும், திங்கள் கிழமை அதிகாலை அதாவது 2.30 மணிவரை களத்தில் நின்ற நடேசன், பத்மநாதனுடன் உரையாடி விட்டு காலையில் வெள்ளைக் கொடியோடு சரணடையச் சென்றபோது, நடேசனையும் தளபதி ரமேஷையும் போராளிகளையும் இலங்கை ராணுவம் சுட்டுக் கொன்று விட்டதாகவும் ஜெகத் கஸ்பர் தனது வாக்குமூலக் கட்டுரையில் எழுதியிருந்தார்.

அன்றைய சூழலில் இக்கட்டுரையை மேலோட்டமாகப் படித்தவர்கள், பிரபாகரனையும் போராளிகளையும் காப்பாற்ற ஃபாதர் வேலை செய்திருக்கிறார் என்றே நினைத்தார்கள். வாசித்ததைத் தாண்டி யோசிக்கவில்லை. ஆனால் இன்று இக்கட்டுரையைப் படிக்கும் போது எழுகின்ற கேள்விகளுக்கு ஜெகத் கஸ்பரோ அதோடு தொடர்புடையவர்களோ பதில் சொல்வார்களா?

அதே மே மாத இறுதியில் இது போன்ற இன்னொரு வாக்குமூலக் கட்டுரையும் இணையங்களில் உலவியது. லண்டன் டைம்ஸ் இதழில் வெளிவந்த மேரி கொல்வினின் கட்டுரைதான் அது. அவரும் ஜெகத்தைப் போலவே புலிகளுக்கும் மேற்குலக அரசுகளுக்குமிடையில் இறுதி நேர தூதுவராகச் செயல்பட்டவர். தவிரவும் மேரி கொல்வின் 2001இல் வன்னிக்குச் சென்றிருந்த போது இராணுவத்தின் ஷெல்லடியில் ஒரு கண்பார்வை பாதிக்கப்பட்டவர். அவரது வாக்குமூலக் கட்டுரையில் என்ன இருக்கிறது என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

"நாங்கள் எமது ஆயுதங்களைக் கீழே வைக்கிறோம்' என்று ஞாயிற்றுக்கிழமை (17.05.2009) அன்று பின்னிரவில் கடைசியாக நடேசன் என்னிடம் கூறினார். ஆனால் ஒபாமா நிர்வாகத்திடமிருந்தும் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்தும் பாதுகாப்புக்கான உத்திரவாதத்தை நாம் எதிர்பார்த்துள்ளோம்' என்றும் கூறியிருந்தார். வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும் இலங்கை ராணுவத்திடம் சரணடைவது 26 ஆண்டு கால உள்நாட்டுப் போரில் மிகவும் அபாயகரமான தருணம் என்பதை அவர்கள் (அதாவது புலித் தலைவர்கள்) நன்கு உணர்ந்திருந்தனர் என்று லண்டன் டைம்ஸ் நிருபரான மேரி கொல்வின் குறிப்பிடுகின்றார்.

மேலும் புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சார்ந்த சீவரத்தினம் புலித்தேவனையும், நடேசனையும், சமாதானச் செயலகத்தைச் சார்ந்த 300 போராளிகளையும் காப்பாற்றுவதே அவர்களின் (புலிகளின்) நோக்கமாக இருந்தது என்று எழுதுகின்ற மேரி கொல்வின், முக்கியமாக மூன்று விசயங்களை ஐ.நா.விற்கு தெரிவிக்குமாறு நடேசன் தன்னிடம் கேட்டுக் கொண்டதாகக் கூறுகின்றார். ஒன்று புலிகள் ஆயுதங்களைக் கீழே வைப்பார்கள், இரண்டு அமெரிக்கர்கள் அல்லது பிரிட்டிஷாரிடமிருந்து பாதுகாப்புக்கான உத்திரவாதம் வழங்கப்பட வேண்டும். மூன்று தமிழ் சிறுபான்மையினரின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் அரசியல் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் இணங்கவேண்டும். இந்த உறுதிமொழிகளை புலிகள் கோரியிருந்தனர்."

புலிகள் வைத்த இம்மூன்று கோரிக்கைகளையும் சுட்டிக் காட்டுகிற மேரி கொல்வின், "ஞாயிற்றுக்கிழமை 17.05.2009 இரவுக்குப் பின்னர் புலிகளிடம் இருந்து மேலதிகமான

-08/04/2008
- 2008 படங்கள் : ஒரு அலசல் -05/04/2008
- பொல்லாதவன் -03/01/2008

<< Previous Page

உல்லாசமாய் கேளுங்க ! FM ரேடியோ

HI LOW HI LOW
HI LOW HI LOW

www.tamilarangam.net

அரசியல் கோரிக்கைகளோ, படங்களோ வரவில்லை. சரண் என்ற வார்த்தையை உபயோகிக்க நடேசன் மறுத்தார். என்னிடம் அவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது அந்த வார்த்தையைப் பிரயோகிக்க மறுத்திருந்தார்" என்றும் கூறுவது மிக முக்கியமானது. மேரி கொல்வின் எழுத்திலிருந்து இறுதிப் போரின் போது புலிகளின் மனநிலை என்னவாக இருந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. ஒருவேளை, வேறு வழியில்லாமல் சரணடையும் சூழல் எழுந்தால் கூட, அது மூன்றாம் தரப்பு நாடு ஒன்றிடம்தான் என்று நடேசன் தெரிவித்ததாகவும் மேரி கொல்வின் எழுதுகின்றார்.

அப்போது நியூயார்க்கிலிருந்த ஐ.நா. அலுவலகம், ஐ.நா.வின் ஆசியாவுக்கான தூதர் விஜய் நம்பியாருடன் மேரி கொல்வினுக்கு தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. புலிகள் ஐ.நா.வின் உத்திரவாதத்தில் ஆயுதங்களை ஒப்படைக்கும் முடிவை எடுத்திருப்பதை மேரி கொல்வின் விஜய் நம்பியாரிடம் சொல்கிறார். விஜய் நம்பியாரோ, "நடேசனும், புலித்தேவனும் சரணடையும் போது பாதுகாப்பாக இருப்பார்கள்" என்று தனக்கு இலங்கை தரப்பில் உத்திரவாதம் அளிக்கப்பட்டதாக கொல்வினிடம் கூறுகிறார். கடைசியில் திங்கள் கிழமை காலை 6.20 மணிக்கு அந்த இறுதிச் சமாதான முயற்சியில் ஈடுபட்ட இன்னொரு நபரான சந்திர நேரு என்ற இலங்கை எம்.பி, நடேசனுடன் பேசியிருக்கிறார். (இவர் இப்போது அச்சுறுத்தல் காரணமாக இலங்கைக்குச் செல்ல முடியாமல் லண்டனில் வாழ்கிறார்) என்றும் மேரி கொல்வின் தனது வாக்குமூலக் கட்டுரையில் எழுதியிருக்கின்றார்.

<< முதல் < முந்தைய 1 2 அடுத்த > கடைசி >>

Last update : 08-01-2010 19:36

## Users' Comments RSS

**Average user rating**

(0 vote)

## Add your comment

[+] Show form

No comment posted

**mXcomment 1.0.8 © 2007-2010 - visualclinic.fr**
**License Creative Commons - Some rights reserved**

**Related news items**
- தமிழினப்படுகொலை விவகாரத்தில் 'உலக மௌனம்' கவலையளிக்கிறது:கிருஷ்ணசாமி -06/05/2010
- தமிழினப்படுகொலை விவகாரத்தில் 'உலக மௌனம்' கவலையளிக்கிறது:கிருஷ்ணசாமி -06/05/2010
- சீனர்களின் எச்சில் சோற்றில் பிழைக்கும் முதிய தமிழ் தம்பதியர் : மலேசியா -30/04/2010
- சீனர்களின் எச்சில் சோற்றில் பிழைக்கும் முதிய தமிழ் தம்பதியர் : மலேசியா -30/04/2010
- மகிந்தவுக்கு ஆதரவளிக்கும்படி தமிழ் தே.கூட்டமைப்பிற்கு இந்தியா அழுத்தம் -30/04/2010

**Newer news items**
- கருணாநிதியிடம் அளவோடு பழகாவிட்டால் ஆபத்து! ரஜினிகாந்த் சூசக எச்சரிக்கை! -15/02/2010
- குற்றம் காணுவதே இவர்களின் 'மெகா புரட்சி' -12/02/2010

**Older news items**
- இலங்கை அதிபர் தேர்தல்-தமிழர் வாக்கு பேய்க்கா? பிசாசுக்கா? பூதங்களுக்கா? -04/12/2009
- இதுதானோ கலைஞரின் நெஞ்சுக்கு நீதி! : தமிழருவிமணியன் -23/11/2009
- அதிர்வு இணையம் மீது கஸ்பர் அடிகளார் கடும் கோபம் -23/10/2009
- காணொளி-இலங்கைத் தூதர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி விவகாரம் : சீமான் -09/10/2009
- US responds to Sri Lanka protest over Clinton remark - Letter to Hillary Clinton -06/10/2009

Next Page>>

< முந்தைய அடுத்த >

[பின்திரும்புக]




**Related news items**
- துபாயில் நிரித்யசமர்பண் 2010 எனும் சிறப்பு நடன நிகழ்ச்சி -06/05/2010
- துபாயில் நிரித்யசமர்பண் 2010 எனும் சிறப்பு நடன நிகழ்ச்சி -06/05/2010
- இன்னொரு சைக்கிள் ஓட்டியும், பின்னொரு சிறுவனும் : செல்வராஜ் ஜெகதீசன் -30/04/2010
- எனதறையின் சாத்தான் : லோ.கார்த்திகேசன் -30/04/2010
- கோடையும் வாடையும் : கிளியனூர் இஸ்மத் -30/04/2010

**Newer news items**
- மீன் வறுவல் - 'அதிகாலை' அகல்யா -18/02/2008
- இறால் வறுவல் - 'அதிகாலை' அகல்யா -18/02/2008
- சிக்கன் பிரியாணி -அதிகாலை அகல்யா -15/01/2008
- மட்டன் பிரியாணி - அதிகாலை அகல்யா -15/01/2008
- செட்டிநாடு கோழிக்குழம்பு -12/01/2008

**Older news items**
- கோழி குருமா - அதிகாலை அகல்யா -29/12/2007

<< Previous Page

**உலகச் செய்திகள்**

© 2010 http://adhikaalai.com

SUBMIT SITE | TERMS & CONDITIONS | FEEDBACK | ABOUTUS | CONTACT US | PHOTO